www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**11** Register no: ______

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

மணி - 1.30 **தமிழ்** மதிப்பெண்: 50

## பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 1 × 10 = 10

1. பாயிரம் இல்லது _____ அன்றே
   (அ) காவியம் (ஆ) பனுவல் (இ) பாடல் (ஈ) கவிதை
2. தவறான இணையைத் தேர்வு செய்க.
   (அ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர்
   (ஆ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்
   (இ) கடல் + அலை - உயிர் + மெய்
   (ஈ) மண் + வளம் - மெய் + மெய்
3. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க
   (அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
   (ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
   (இ) சு. வில்வரத்தினம் - ஆறாம்திணை
   (ஈ) இந்திரன் - பேச்சு மொழியும் கவிதை மொழியும்
   (i) அ (ii) அ, ஈ (iii) ஆ, ஈ. (iv) அ, இ.
4. உலகச் சிட்டுக் குருவிகள் நாள்
   (அ) மார்ச் 20 (ஆ) மார்ச் 19 (இ) மார்ச் 21 (ஈ) மார்ச் 22
5. "வான் பொய்த்தது"- என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்
   (அ) வானம் இடிந்தது (ஆ) மழை பெய்யவில்லை
   (இ) மின்னல் வெட்டியது (ஈ) வானம் என்பது பொய்யானது
6. காட்டல், கோடல் என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?
7. காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   (அ) பாரதிதாசன் (ஆ) அண்ணா மலையார்
   (இ) முருகன் (ஈ) பாரதியார்
8. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.
   1) வெள்ளிவீதியார் - அ) புறநானூறு
   2) அண்ணாமலையார் - ஆ) சி. சு. செல்லப்பா
   3) வாடிவாசல் - இ) குறுந்தொகை
   4) இளம் பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து
   (i) அ, ஆ, இ, ஈ (ii) ஆ, ஈ, அ, இ
   (iii) இ, ஈ, ஆ, அ (iv) இ, ஈ, அ, ஆ
9. Passport என்பதன் தமிழாக்கம் தருக.
10. தகப்பன் கொடி புதினத்தை எழுதியது யார்!
    (அ) அழகிய பெரியவன் (ஆ) பிரமிள்
    (இ) பெரியவன் கவிராயர் (ஈ) புதுமைப்பித்தன்

## பகுதி - ஆ

II. ஏதேனும் இரண்டிற்கு மட்டும் விடையளி 2 × 2 = 4

11. இனம் மொழி குறித்து இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
13. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?

III. ஏதேனும் இரண்டிற்கு மட்டும் விடையளி 2 × 2 = 4

14. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறு குறிப்பு வரைக
15. மதிப்புக் கூட்டு பொருட்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
16. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

IV. விடையளி 3 × 2 = 6

17. உயிரீறு மெய்யீறு விளக்குக
18. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
19. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் விட்டிற்கு வருகைத் தாருங்கள். என் விட்டிற்கு பக்கத்து வீடு தான் குமரனது வீடு.

பகுதி - இ

V. ஏதேனும் இரண்டிற்கு விடையளி 2 × 4 = 8

20. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?
21. திருமலைமுருகன் பள்ளு கூறும் வடகரை நாட்டின் வளத்தை எழுதுக.
22. பொதுவியல் திணையைச் சான்றுடன் விளக்குக

VI. ஏதேனும் இரண்டிற்கு விடையளி 2 × 4 = 8

23. வேதிக் கலப்பில்லாத பூச்சிக் கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக
24. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க
25. தமிழாக்கம் தருக.
    1. The pen is mightier than the Sword.
    2. A picture is worth a thousand words.
    3. Knowledge rules the world.
    4. Work while you work and play while You play,

பகுதி - ஈ

VII. ஏதேனும் ஒன்றிற்கு விடையளி 1 × 6 = 6

26. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க
27. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

பகுதி - உ

VIII. மனப்பாடப் பகுதியை அடிபிறாழமல் எழுது. 1 × 4 = 4

28. 'ஏடு தொடக்கி' எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com